செ.வெ.எண்: 13 நாள்: 04.08.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**தாய்ப்பால் வார விழாவினை முன்னிட்டு பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பாலின் அவசியம் குறித்த விழிப்புணர்வு வீடியோ வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தாய்ப்பால் வார விழாவினை முன்னிட்டு பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பாலின் அவசியம் குறித்த விழிப்புணர்வு வீடியோ வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.பிரபாகரன் அவர்கள் முன்னிலையில் இன்று (04.08.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் - தேசிய ஊட்டச்சத்து குழுமத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 1 முதல் 7 வரை உலக தாய்ப்பால் வார விழாவாக கொண்டாடப்படுகிறது. தாய்ப்பால் வார விழாவினை முன்னிட்டு இன்று (04.08.2021) விழிப்புணர்வு வாகனத்தின் மூலம் பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு செய்யப்படவுள்ளது. இந்த ஆண்டிற்கான கருத்துரு **(தாய்ப்பால் கொடுப்பதை பாதுகாப்போம் - இது அனைவரின் பொறுப்பாகும் - Protect Breastfeeding It’s A Shared Responsibility)**. இந்த வாகனம் துறைமங்கலம் TELC பள்ளி வளாகம், எசனை, அனுக்கூர், வாலிகண்டபுரம், லப்பைக்குடிகாடு, குன்னம், ஆதனூர், வழியாக மேலமாத்தூர் வரை சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

பின்னர், தாய்ப்பால் வாரவிழாவினை முன்னிட்டு **“எந்த சூழ்நிலையிலும் எந்த இடத்திலும் தாய்மார்கள் தாய்ப்பால் தருவதற்கு ஆதராவாக இருப்பேன் மற்றும் ஊக்குவிப்பேன். அனைத்து தாய்மார்க்கும் அக்குடும்பத்தினருக்கும் மகத்துவங்களை எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்துவேன். குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் சீம்பால் கொடுப்பதற்கும், தோலுடன் தோல் தொடர்புகொள்வதற்கும், அனைத்து தாய்மார்களுக்கு ஆதரவளிப்பேன் என உறுதி கூறுகிறேன். எந்த தாயும் அல்லது அக்குடும்பத்தில் உள்ள எவரேனும் குழந்தைக்கு தாய்ப்பால் தவிர பிற திரவங்கள் (மாட்டுப்பால், பால்பவுடர், தேன், சர்க்கரை தண்ணீர், கழுதைப்பால் மற்றும் பிற) தருவதை நாங்கள் கடுமையாக எதிர்ப்போம். பிரசவித்த அனைத்து தாய்மார்களும் தாய்ப்பால் கொடுப்பதை பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் ஆதரிக்கவும் என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் செய்வேன்”** என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர் திருமதி தி.புவனேஸ்வரி, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், போஷான் அபியான் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், திட்ட உதவியாளர்கள், வட்டார மேற்பார்வையாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**